SOND


இணைவோம். செயற்படுவோம். புதிய சமூகத்தினை உருவாக்குவோம்.



T.P:- 077-3314262 E-Mail:-senthu@eureka.lk web:-www.sond.lk


# மாதாந்த அறிக்கை

வைகாசி, 2013

**Social Organizations Networking for Development**


**RKM Road**
**Akkaraipattu**


## இதழின் உள்ளே

1. யாழ்
2. அம்பாறை
3. மட்டக்களப்பு ஆகிய மூன்று மாவட்டங்களினுடைய செயற்பாடுகள்


**No. 19, Saravana Road**
**Kallady Batticaloa.**

**60" Arasady Road**
**Jaffna.**

SOND

# யாழ் மாவட்டத்தின் செயற்பாடுகள்

## மிதிவெடி அபாயக்கல்வி

மிதிவெடி அபாயக்கல்வி செயற்திட்டத்தில் நடைபெற்ற பணியாளர்களுக்கான பயிற்சிகள் சர்வோதயா அலுவலகத்தில் நடைபெற்றது இதில் சர்வோதாயா MRE பணியாளர்களும் கலந்து கொண்டனர். ஆரம்ப நிகழ்வாக Unicef நிறுவத்தின் பிரதிநிதியும் மிதிவெடி அபாயக்கல்வி செயற்திட்டத்தின் யாழ் கிளிநொச்சி மாவட்ட திட்ட அதிகாரி திருமதி மரீனா அவர்கள் உரையாற்றுவதையும் பணியாளர்களையும் காணலாம்.

மதிவெடி அபாயக்கல்வி செயற்பாட்டின் கள விஜயத்தின் போது தெல்லிப்பளைப் பிரதேசத்தில் இனங்காணப்பட்ட வெடிக்காத வெடிபொருட்கள் அடையாளம் காணப்பட்டது.

தெல்லிப்பளை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கிராம அலுவலர்களுக்கான மிதிவெடி அபாயக்கல்வி 22.05.2013 அன்று நடைபெற்றது இதில் 30 கிராம அலுவலகள் கல்ந்துகொண்டனர்.












SOND

## அனுபவப் பகிர்வு

மிதிவெடி அபாயக்கல்வி செயற்திட்டத்தில் பணியாற்றும் பணியாளர்கள் 21.05.2013 ஜெயப்பூர் நிறுவனத்தின் செயற்கை அவையங்கள் பொருத்தும் செயற்பாட்டினை மேற்பார்வையிட்டனர்

பயிற்சி

இலங்கை செஞ்சிலுவை சங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் இந்தியன் வீட்டுத்திட்டத்தில் பணியாற்றும் உத்தியோகத்தர்களுக்கு 15.06.2013 அன்று மிதிவெடி அபாயகல்வி ஒரு நாள் பயிற்சி வகுப்பு வழங்கப்பட்டது இதில் 63 பணியாளர்கில் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் , பொறியியளாலர்கள் சமூக ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மிதிவெடி அபாயக்கல்வி விழிப்புணர்வு

மருதன்கேணி J/431 ஆழியவளைப்பிரதேசத்தில் கிராமத்தில் நாளாந்த கொடுப்பனவுக்காக வீதிகள் துப்பரவு செய்து வரும் தொழிளாலர்களுக்கு SHA நிறுவனத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டு SOND நிறுவனத்தினால் மிதிவெடி அபாயக்கல்வி வழங்கப்பட்டது இதில் 53தொழிளாலர்கள் கலந்து கொண்டனர்.











# அம்பாறை மாவட்டத்தின் செயற்பாடுகள்

## மொழிகள் உரிமைகள் திட்டம்

**இளையோர் பரிமாற்றல் நிகழ்ச்சி**

**சமூக வேலைத்திட்டங்களில் இளைஞர்களின் ஈடுபாட்டினை அதிகரிக்கச்செய்தலினை நோக்காகக் கொண்டு அக்கரைப்பற்று SOND அமைப்பானது மொழிகள் உரிமைகள் திட்டத்தின் கீழ் இளையோர் பரிமாற்றல் நிகழ்வினை மூவின, நான்கு மதத்தினையும் சேர்ந்த இளையோரை ஒன்று சேர்த்து 5,6/05/2013 அன்று தம்பட்டை SWOAD பயிற்சி நிலயத்தில் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ச. செந்துராசா அவர்களின் தலைமையின் கீழ் நடாத்தியது.**

**இந் நிகழ்விற்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் அம்பாறை ஆகிய நான்கு மாவட்டங்களில் தெரிவுசெய்யப்பட்ட இளைஞர், யுவதிகளும் பங்குபற்றி தங்களுடைய திறன்களை வெளிக்காட்டியதுடன் தங்கள் பிரதேசங்களில் இளையோரினால் செயற்படுத்தப்படவிருக்கும் சமூக வேலைத்திட்டங்களினையும் திட்டமிட்டுக்கொண்டனர்.**

**சர்வ மதத் தலைவர்களும், ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் திரு.V.ஜெகதீசன் ஐயா அவர்களும் அதிதிகளாகக் கலந்துகொண்டு சிறப்பித்ததுடன் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் ஊடகவியலாளர்களும் கலந்துகொண்டனர்.**









## நிதியின்றிய செயற்திட்டங்கள்

**அரச சார்பற்ற நிறுவனமென்றால் அது நிதியோடுதான் செயற்படும் என்ற மாயை கற்றவரிடையே கூட உள்ளது. இக் கருத்தினை மாற்றி நிதியின்றி சிலரின் நேரத்தையும் எமது வளத்தையும் பயன்படுத்திச் செய்யப்படும் கீழ்வரும் செயற்திட்டங்கள் இவற்றிற்கு நல் உதாரணங்களாகும்.**

### 01. இம் மாதம் நடைபெற்ற கலந்துரையாடல் விபரம்.

இம் மாதம் காந்தி கழக சிறுவர்களுக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 11.00 மணிக்கு பணியாளரான தி.ஜெனிதா அவர்களினால் SOND பயிற்சி மண்டபத்தில் 02 கலந்துரையாடலும், 03 திரைப்படக்காட்சி காண்பித்தலும் நடாத்தப்பட்டது திரைப்படக் காட்சியில் 68 சிறுவர்கள் கலந்து கொண்டுள்ளார்கள்

### 02. சிறுவர்களினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்.

01. 2013.05.19ம் திகதி அன்று 03 சிறுவர்கள் எமது அமைப்பிற்கு வருகை தந்து பாவனையற்ற கடதாசியினை பயன்படுத்தி 35 குளுசைப்பக்கற் தயாரித்து தந்துள்ளார்கள்.
02. 2013.05.26ம் திகதி அன்று நடமாடும் நூலக சேவைக்காக அனைத்துச் சிறுவர்களும் 05 புத்தகங்கள் வீதம 20 புத்தகங்கள் எடுத்துச் சென்றனர்.

### 03. SOND அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்.

01. சிறுவர்களின் ஒய்வு நேரங்களை பயனுள்ள வழியில் கழிக்கும் வகையில் வாராந்த கலந்துரையாடலின் முடிவின் போது சிறுவர்கள் விளையாடுவதற்காக விளையாட்டுப்பொருட்கள் வழங்கப்பட்டது.
02. நடமாடும் நூலக சேவைக்காக 20 புத்தகங்கள் தெரிவு செய்து வழங்கப்பட்டது.





SOND

## ஆங்கில வகுப்பு

மியான் மார் நாட்டிலிருந்து வருகை தந்த தொண்டரான சுகித்வோ என்னும் யுவதியினால் ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்றினைச் சேர்ந்த 12 மாணவர்களுக்கு ஆங்கில வகுப்பினை நடாத்தி வருகின்றார். இம்மாதம் 6 வகுப்புக்கள் நடாத்தப்பட்டுள்ளது.



## கணனி வகுப்பு

சமூகத்தில் உள்ள இளையோர், சிறுவர்களுடைய கணனிப் பாவனையை அதிகரிக்கும் நோக்கத்தில் எமது அமைப்பில் கணனி செயல்முறை வகுப்புக்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றது.

இதனடிப்படையில் இம் மாதம11 சிறுவர்கள் 12 தடவைகளும் 03 இளையோர் 04 தடவைகளும் கணனியைப் பயன்படுத்தியுள்ளனர்.



## தகவல் வளநிலையம்

சமூகத்தில் வாசிப்புத் திறனை அதிகரிக்கும் பொருட்டு எமது அமைப்பில் மக்களுக்கான நூலக சேவை செய்யப்பட்டு வருகின்றது. மேலும் எமது அமைப்பின் கீழ் செயற்படும் சிறுவர்களக சிறுவர்களாலும் நடமாடும் நூலக சேவை நடைமுறைப்படுத்துகின்றோம் இதனடிப்படையில் இம்மாதம் சிறுவர், இளையோர், நிறுவனப் பணியாளர்கள், SOND பணியாளர்கள்,அரசாங்க ஊழியர்கள் ஆகியோர் இம்மாதம் 7 தலைப்பில் 120 புத்தகங்களை பயன்படுத்தியுள்ளார்கள்.



SOND

# மட்டக்களப்பு மாவட்டத்தின் செயற்பாடுகள்

எதிர்காலத்தல் சிறந்த சூழலை உருவாக்கிக்கொள்வதற்கு உகந்த சமூகத்தினை கட்டியெழுப்புதல் .(Create a conducive Society for Good Environment for the Future).
காலநிலைமாற்றமும் சூழல் பாதுகாப்பும் (Climate Change & Environmental protection )

அந்த வகையில் வீதி நடுபகுதியில் நடுப்பகுதியில் நடப்பட்ட மரங்களில் 13 மரங்கள் வாடிய நிலையில் காணப்பட்டதுடன் 03 கூடுகளும் மாற்றும் நிலைக்கு உருவானது. இதனை 22.05.2013 -26.05.2013 வரை மரங்களை மாற்றி நடுவதுக்கு மாநகர சபையில் மணல் பெற்றுக்கொண்டதுடன் பழுதடைந்த மரங்களை அகற்றி அவ்விடத்தில் புதிய மரங்கள் நடுவதற்கு குழிகள் தோண்டப்பட்டு மரங்கள் நடப்பட்டதுடன் நாட்டிய மரங்களுக்கு இயற்கைப் பசளையுடன் மண்சேர்த்து போடப்பட்டுள்ளது. இதற்கான மரங்களை வனவளத்திணைக்களத்தில் இருந்து பெற்று இத்திட்டம் நிறைவு செய்யப்பட்டது

இதனைத் தொடர்ந்து மட்டக்களப்பில் இரு பாடசாலைகளிலும் முதற்கட்டமாக பசுமையான சூழலை உருவாக்கும் நோக்குடன் சூழல் பாதுகாப்புகுழுக்கள் அமைத்து அவர்களுக்கு விழிப்புணர்வு கருத்தரங்குகள் போட்டி நிகழ்ச்சிகள் நடத்துவதற்கும் அதிபருடன் கலந்துரையாடப்பட்டதுடன் இது தொடர்பான வேலைகள் முன்னெடுக்கப்பட்டும் வருகின்றது. அத்திட்டத்தில் முதல் கட்டமாக பாடசாலையில் சிறு தோட்டம் ஆரம்பிப்பதுக்கான பயிர் விதைகள் மற்றும் மரங்களும் வழங்கப்பட்டது





**USAID நிறுவனத்தின் RISEN(Reintegration & Stabilization in the East & North)**

திட்டத்தின் விளைவுகளை ஆவணப்படமாக்கும் செயற்ப்பாட்டில் **SOND** நிறுவனம் **Grantee** ஆக செயற்பட்டுவருகின்றது அந்தவகையில் ஆவணப்படத்தினை வாகரை தொடக்கம் மங்களகம வரைக்குமான பிரதேசங்களில் காண்பித்து மக்களுக்கு தெரிவுபடுத்துவதற்கான கிராமமட்ட தொண்டர்களை தயார்படுத்தும் செயலமர்வு சிகிரியாவில் 10 -12.05.2013 ஆகிய திகதிகளில் இடம்பெற்றது இதில் செங்கலடி கிரான் மற்றும் வாகரை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்து 19 தொண்டர்கள் கலந்து கொண்டனர் அவர்களுக்கு அவணப்படம் கண்பிக்கப்பட்டு மக்கள் எவ்வாறான கேழ்விகளை கேட்கின்ற போது பதிலளிக்கும் முறை தெற்கான திறன் பற்றும் வலுப்படுத்தப்பட்டது







## விவசாய அமைப்பு தொடர்பானது

மண்டபத்தடி கமநல கேந்திர நிலையத்தின் கீழ் இயங்கி வரும் 25 விவசாய அமைப்புக்களில் மிகச் சிறப்பான இயங்கிவரும் 5 விவசாய அமைப்பின் செயற்பாட்டை இன்னும் சிறந்த முறையிலும் செயற்பாட்டை மேற்கொள்ளும் வகையில் தற்போது துரித முறையில் சுயதொழில் மேற்கொள்வதற்காக கடன் வழங்கும் வங்கியான பிரதேச அபிவிருத்தி வங்கி (RDB) உடன் தொடர்பை ஏற்படுத்தும் வகையில் இம்மாதம் 5 விவசாய அமைப்புகளின் முக்கிய பிரதிநிதிகளை அழைத்து 02.05.2013 காலை 10.45 மணியளவில் பொதுக்கலந்துரையாடல் நடாத்தப்பட்டது இக்கலந்துரையாடலுக்கு வங்கி முகாமையாளர் திரு சுந்தரமூர்த்தி கலந்துகொண்டதோடு பிரதேச அபிவிருத்தி வங்கியின் செயற்பாடுகள் தொடர்பாகவும், எவ்வாறு கடனை பெற்றுக்கொள்ளலாம் எனவும் தெளிவுபடுத்தியதோடு விவசாயிகளின் தேவைகள் பற்றியும் கேட்டறியப்பட்டது.





## மூலிகைத் தோட்டம்

அம்பிளாந்துறை கிராமத்தில் தெரிவுசெய்யப்ட்ட 30 பயனாளிகளுக்கு முதற்கட்டமாக 15 வகையான மூலிகை கன்றுகள் வழங்கப்பட்டது. இவ் மூலிகைக்கன்றுகளை 2013.05.22 அன்று பயனாளிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டது



## சமாதான வேலைத்திட்டம்

கண்டி சமாதான அமைப்பின் ஏற்பாட்டில் காலி மாவட்டத்தில் 16 -19.05.2013 ஆகிய திகதியல் இடம்பெற்ற சமாதான வேலைத்திட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தின் சார்பில் சொண்ட் கலந்துகொண்டது.மேலும் காலி முஸ்லிம் மகளீர் பாடவாலை வளாகம் பங்குபற்றுனர்களால் சிரமதானம் செய்து கொடுக்கப்பட்டதுடன் சர்வ மத கலந்துரையாடலும் வெளிக்கள சுற்றுலாவும் இடம்பெற்றது





# கிளிநொச்சி மாவட்டத்தில் சொண்ட் செயலகம் ஆரம்பம்

இம் மாவட்டத்தில் சொன்ட் நிறுவனம் தனது செயற்பாடுகளை விஸ்தரிக்கும் முகமாக 20.05.2013ல் தனது செயலகத்தினை 18/3A அணை வீதி, கணேசபுரம் என்னும் முகவரியில் ஆரம்பித்து எதிர்வரும் காலத்தில் இம் மாவட்டத்திலுள்ள மக்களுக்கான செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளோம்

தொடர்புகொள்ளவேண்டிய கைபேசி இல 0772242401



## தொலைநோக்கு

“புதிய சமூகம் உருவாக்குவோம்”

## பணிநோக்கு

.சமூகத்தில் உள்ள சகல தரப்பினரையும் நிறுவனங்களுக்கும் உதவி வழிகாட்டி சமூக மாற்றத்தின் வேலைத்திட்டங்களில் வலுவூட்டிப் பங்காளிகளாக்கி சமூக மாற்றச் செயற்பாடுகளில் பங்கு கொள்ளவைத்தல்.